திரு. எம். ராஜா அய்யர் : இடைநிலைக் கல்வி வாரியம் ஆண்டுக்கு எத்தனை முறை கூடுகிறது ? இதற்கு முன் இருந்த வாரியம் கூடவேயில்லை என்ற புகார் அரசிற்கு வந்திருக்கிறதா ? ஆண்டுக்கு இத்தனை முறை கூடவேண்டுமென்ற விதியிருக்கிறதா ? அது அனுஷ்டிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் குழுவின் காலம் 3 ஆண்டு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆண்டுக்கு இத்தனை முறை கூட வேண்டுமென்ற விதிமுறை இருக்கக் கூடும். இதற்கு முன்னால் சரியாகக் கூடாமல் இருந்தது. அப்படியிருக்கக் கூடாது என்றுதான் திருத்தியமைக்கப்பட்டு அதன் பணிகள் செம்மையாக ஆற்றப்பட வேண்டுமென்ற அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether the subject of reforms in the educational system in so far as secondary education is concerned, are placed before this Board for its advice or whether the Board has any other functions ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக இடைநிலைக் கல்வி பற்றி, பொதுவான பிரச்னைபற்றி, அவ்வப்போது ஆலோசனை கூறுவதற்குத் தான் இந்தக் குழு இருக்கிறது. சிலபல் மற்றவைகளுக்கு தனிக் குழுக்கள் தனித்தனியாக அமைத்து அந்தந்தத் துறைக்கு உரிய வல்லுநர்களும் விற்பன்னர்களும் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் ஆராய்கிறார்கள். அந்த சிலபல் எல்லோருடைய பரிசீலனைக்கும் வைக்கப்பட்ட பிறகு நடைமுறைப்படுத்தும் முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Tailoring Instructor

*57 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the qualifications prescribed for tailoring instructors serving in Secondary Schools; and

(b) whether any such qualified tailoring instructor serving in the Virudhunagar Educational District, has been denied his salary as unqualified ?

தையற்கலை ஆசிரியர்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் தையற்கலை ஆசிரியர் பதவிகளுக்கு வரையறுக்கப்பட்ட தகுதிகள் யாவை ?

(இ) விருதுநகர் கல்வி மாவட்டத்தில் பணியாற்றும் அத்தகைய தகுதியுடைய தையற்கலை ஆசிரியர் யாருக்கேனும், அவர் தகுதியற்றவர் என்ற காரணம் காட்டப்பட்டு ஊதியம் மறுக்கப்பட்டதா ?

(Electric Motor Pump)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) பொதுத் தொகுதி; எட்டாம் வகுப்பு அல்லது எஸ். எஸ். எல். சி. தேர்வு அல்லது சமமான பகுதி.

தொழில் நுட்பத் தகுதி:
(i) தொழில் பள்ளி சான்றிதழ்
அல்லது
(ii) அரசு தொழில் நுட்பத் தேர்வு (கீழ்நிலை)
அல்லது
(iii) இந்திய அரசின் வேலை வாய்ப்பு மற்றும் மறு குடியமர்த்தல் இயக்கத்தினர் வழங்கும் சான்றிதழ்
அல்லது
(iv) இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற பயிற்சி முறைகள்.

(இ) இல்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, விருதுநகர் கல்வி மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கிற தனியார் உயர்நிலைப் பள்ளியில் தையல் ஆசிரியர் இந்தத் தகுதிகள் எல்லாம் பெற்றிருந்தும் அவருக்கு ஊதியம் வழங்கப் படவில்லை என்ற புகார் அரசிற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: விருதுநகர் கல்வி மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சி.எம்.எஸ். உயர்நிலைப் பள்ளியில் தையல் ஆசிரியராகப் பணியாற்றிய ஒருவருக்கு அதற்குத் தகுதியில்லாததால், விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அது தவறு என்று பள்ளித் தணிக்கையில் குறிப்பிடப்பட்டதால், 1969 டிசம்பர் மாதம் முதல் அவருடைய ஊதியம் நிறுத்தி வைக்கப் பட்டது. அதற்குப் பிறகு அந்த நிலைமை சரி செய்யப்பட்டு அவருக்குச் சம்பளம் கொடுக்க 7—4—1971-ல் உத்தரவு போடப்பட்டது. நிறுத்திவைக்கப் பட்ட சம்பளம் கொடுக்கப்பட்டதாகவும் நிலுவை எதுவும் இல்லையென்றும் பள்ளிக் கல்வி இயக்குனர் தெரிவித்தார்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, இந்தச் சம்பவத்தை அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவந்ததற்குக் காரணம் ஒருவர் தகுதி பெற்றிருந்தும் கூட அவர் தகுதி பெறவில்லையென்று காரணம் காட்டி பல மாதங்கள் சம்பளம் கொடுக்காமலிருந்ததைப் பற்றி அரசு விசாரித்து ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்று அந்த அதிகாரிகளிடம் "எக்ஸ்ப்ளனேஷன்" வாங்க அரசு முன்வர வேண்டும். அதைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தணிக்கை அதிகாரி அப்படிக் குறிப்பிட்டிருந்ததன் காரணமாக கல்வித் துறையினர் நிறுத்தி வைத்தார்கள். பிறகு ஆராய்ந்த வகையில் அது திருத்தியமைக்கப்பட்டு ஊதியம் கொடுக்கப் பட்டது. இதுபற்றித் தனி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. கே. ராஜாராம்: தவறான தணிக்கை ரிப்போர்ட் கொடுத்த அந்த அதிகாரியின் பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? இம்மாதிரி

[29th January 1972

தவருன அறிக்கையினுல் ஒரு ஆசிரியர் குடும்பம் பல மாதங்கள் கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை உணர்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தணிக்கை அதிகாரி அப்படி அறிவித்திருந்தார். அதன் பேரில் நிறுத்திவைக்கப்பட்டது. பிறகு பள்ளிக் கல்வி இயக்குனர் அவர்கள் உத்தரவிட்டு மீண்டும் சம்பளம் கொடுக்கப்பட்டது என்ற விவரமிருக்கிறது. வேறு வகையில் அதற்கு " எக்ஸம்ப்ஷன் " கொடுத்துத் திருத்தினர்களா என்ற விவரமில்லை. உண்மையிலேயே தணிக்கை அதிகாரி தவருகச் சொல்லியிருந்தால், அதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

Office of the Commissioner for Government Examinations, Madras

* 58 Q.—THIRU D. SANTOSHAM :
THIRU M. RAJAH IYER : Will the Hon. the
THIRU V. ISVARMURTI :
Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the proposal to decentralise the office of the Commissioner for Government Examinations, Madras, as recommended by the Working Committee headed by the Hon. Minister for Education is still pending; and

(*b*) if so, the stage and the steps taken to fulfil the recommendation of the Committee ?

அரசினர் தேர்வுகள் ஆணையர் அலுவலகம்.

திரு. டி. சந்தோஷம் :
திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி
திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :
நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாண்புமிகு கல்வி அமைச்சர் தலைமையிலுள்ள செயற்குழு செய்த பரிந்துரையின்படி சென்னை, அரசினர் தேர்வுகள் ஆணையர் அலுவலகத்தின் அதிகாரங்களைப் பரவலாக்கும் திட்டம் ஏதேனுமுண்டா ?

(இ) ஆமெனில், இக்குழுவின் பரிவுரையை நிறைவேற்றும் பணி எந்நிலையில் உள்ளது ? அவ்வாறு நிறைவேற்ற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளின் நிமித்தம், தேர்வு ஆணையர் அலுவலகத்தைப் பிரிப்பது கைவிடப்பட்டது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இப்போது இம்மாதிரிப் பரிட்சைக்கு உட்காரும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஒரேயிடத்தில் தேர்வுக் கமிஷனர்